# ‘குணத்தோடு பழகாத மாந்தர்’

## நாட்டின் சீரழிக்கும் நாசகாலர்கள் !

### கள்ளச் சிந்தையரிடமா கொஞ்சலும் - கெஞ்சலும் ?

—(0)—

### ‘சர்க்கார்’ என்ற பெயருக்கே நலிவு தேடும் நல்லவர்கள்!

### பாட்டாளிகளைத் துரத்தும் பயங்கரச் சட்டங்கள், பணமூட்டைகள் பாதத்தில் பணிவதேன் ?

“தொழில் சீமான்களும், வியாபாரக் கோமன்களும், சர்க்காருக்கு வரி கொடுக்காமல் ஏராளமான பணத்தைப் பதுக்கி வைத்திருக்கிறார்கள்.”

“நேர்மையாகவோ அதிக்கிரமமாகவோ, போர்க்காலத்தில் சம்பாதித்த லாபப்பணம் பற்றிய கணக்கைக் காட்டத் தொழில் அரசுகள், தாங்களாகவே முன் வர வேண்டும்.”

“இந்த லாபத்தின்மீது விதிக்கப்படும் வரிப்பணத்தை பல தவணைகளாக வேண்டுமானாலும் கொடுக்கலாம்.”

“நேர்மையான முறையில் தங்கள் நிலைமையைத் தெளிவுபடுத்த வர்த்தக சமூகத்தினருக்கு இவ்வித ஏற்பாடு செய்து தரப்பட்டுள்ளது. சர்க்காருடன், ஒத்துழைப்பார்களென்றும், பயத்தினால் வெளியே வராமல் பதுங்கி இருக்க மாட்டார்களென்றும் நம்புகிறேன்.”

“இப் பிரச்சினை தீராவிடில் வர்த்தக சமூகத்தினருக்கோ நாட்டிற்கோ எவ்வித நன்மையும் ஏற்படாது.”

—ஜவஹர்—

“எங்கு, எந்த உருவில் கொள்ளைப்பணம் பதுங்கிக் கிடக்கிறது என்பது சர்க்காருக்கே தெரியாததால் ‘கடுமையான நடவடிக்கை எடுப்பது இயலாததாகிறது’”

“தேவையான அளவு விவரம் இல்லாததால், பாதக விளைவுகள் நேராதென்னும் உறுதி மொழியுடன், வேண்டிக் கொள்வதோடு சர்க்கார் திருப்தியடைய வேண்டி இருக்கிறது.”

—ஜான்மத்தாய்—

“சோறு போடுகிறீர்களா மாட்டீர்களா?” என்று, கொஞ்சம் அதட்டிக் கேட்டான் ஒரு பக்கிரி.

“போடாமல்போனால் என்ன செய்வாய்?” என்று, வீட்டுக்காரச் சீமாட்டி பதில் கேள்வி போட்டாள்.

“அடுத்தத் தெருவில் நேற்று ராத்திரி செய்ததுபோல், இங்கும் செய்துவிடுவேன்” என்று மிடுக்காகக் கூறினான் பக்கிரி.

“புரியச் சொல்லப்பா” என்றாள் வீட்டுக்குடையாள்.

“ஒன்றுமில்லையம்மா! அந்தத் திண்ணையில் பட்டினியாகப் படுத்துக்கொண்டேன்” என்றான் பக்கிரி.

★

இப்படி ஒரு கதை கூறப்படுவதுண்டு நமது நாட்டில். கதையில் வரும் பக்கிரி, கேட்பது யாசகமாக இருந்தாலும், கொஞ்சம் மிடுக்காகக் கேட்டால்-அதிகாரத் தொனியிலே கூறினால்-இரக்கச் சிந்தையால இல்லாமல் போனாலும், அச்சமடைந்தாவது, பிச்சையிட மாட்டார்களா — வயிறு நிறையாதா — என்ற முடிவிற்கு வந்து, இயற்கையில் தன்னிடமில்லாத அதிகாரத்தை, எங்கோ இருந்து கடன் வாங்கிக்கொண்டது போலப் பிறர் நம்பும்படியாகப், பிச்சைக்கேட்கிறான் பிச்சையெடுக்கும் பஞ்சைகூட, அதிகாரத்தின் இலக்கணத்தைப் புரிந்துகொண்டு, அதனை, தனது யாசகத் தொழிலில் பிரயோகித்துப் பார்க்கிறான், பலித்தால் பலிக்கட்டுமே என்ற நம்பிக்கையோடு!

வீட்டுக்குடையாள், கொஞ்சம் பயந்த சுபாவியாக இருந்திருந்தால், கண்டிப்பாக, பக்கிரி கையாண்ட ‘அதிகாரம்’, நல்ல பலனைத்தான் பக்கிரிக்குக் கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், வீட்டுக்குடையவளோ, பத்திரகாளி போல இருந்துவிட்டதால், பக்கிரியின் உருட்டல் மிரட்டல், விரும்பிய பலனைக்கொடுக்கத் தவறி விடுகிறது.

*     *     *

“கள்ளச் சந்தையில் திரட்டிய பணம்”

“செலுத்தவேண்டிய வரியைச் செலுத்தாமல் பதுக்கிய பணம்.”

“நேர்மையாகவோ அதிக்கிரமமாகவோ சம்பாதித்தப் பணம்.”

“தவறு செய்தவர்களுக்குத் தண்டனை இல்லை.”

“பிரச்சினையைப் பரஸ்பரம் நேர் செய்துகொள்ளுவோம்.”

“தவணைகளாக வேண்டுமானாலும் கொடுங்கள்.”

“ஒத்துழையுங்கள் !”

“அச்சத்தால் உடனுழைக்க மறுத்து விடாதீர்கள்!”

★

பக்கிரியின் குரலிலே, இந்த நயம்-பயம் - இருக்கவேண்டியது

[தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

Phone No. 4502 Regd. No. M. 5458

விலை அரை அணா

# மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 | சென்னை (10—10—49) ❂ வெளியீடு (11—10—49) | இதழ் 61

## எட்டி பழுத்தென்ன இருந்தென்ன ?

### நகரசபை இருந்தும் நகர் நலிகிறது

சென்னை மாகிலத்திற்கே தலைநகரமாக விளங்குவது சென்னை நகரம். ஆனால் சென்னை நகரம் நிர்வாகம் செய்யப்படும் முறையைக் கவனித்தால், இதை நகரம் என்று சொல்வதற்கே நா கூசும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

சென்னையில் பல தெருக்களின் ஓரங்கள் மக்களின் உறைவிடங்களாக இருப்பதைக் காணலாம். திறந்த வெளியிடங்களிலெல்லாம் அரை குறையான ஓலைக்குடிசைகளைக் காணலாம்.

இவ்வாறு நகரில் ஏழை மக்கள் இருக்க இடமற்றுத்தெரு ஓரங்களில் வாழ்க்கை நடத்தும் பரிதாபம் மட்டுமன்று. வீடுகளில் குடியிருப்பவர்களின் நிலைமையும் இப்படித்தான்.

மிகச் சிறு இடங்களெல்லாம் பேராசைப்பிடித்த வீட்டுச்சொந்தக்காரர்களால் அறைகளாக்கப்பட்டு அவற்றிற்கு ஏராளமான வாடகை வசூலிக்கப்படுகின்றன. சாளரங்களே இல்லாத அறைகளையுடைய வீடுகள் பல இருக்கின்றன. பல குடிகள் சுமார் 75 பேர் வசிக்கக்கூடிய ஒரு வீட்டில் ஒரேகுழாய், ஒரே கக்கூஸ் உள்ள நிலையிலிருக்கும் வீடுகள் பல இருக்கின்றன.

இவற்றையெல்லாம் சென்னை நகரசபை கவனிக்கவில்லை. கவனிக்கத்தக்க அதிகாரமும் பணவசதியும் தன்னிடமில்லை என்கிறது. சென்னைநகர சபை, அரசாங்கம் தன்னுடன் ஒத்துழைப்பதில்லை, ஆதரவு காட்டுவதில்லை, வேலைப் பொறுப்பைச் சிறு அளவேனும் ஏற்றுத்தன் பெரும் பொறுப்பைச் சற்றேனும் குறைக்க முன் வருவதில்லை என்று சென்னைநகரசபை அரசாங்கத்தின் மீது குறை கூறுகிறது.

சென்னை அரசாங்கம் எதற்கெடுத்தாலும் பணமில்லை என்று கூறும் நிலையிலிருக்கிறது. சென்னை நகரசபையும் அதே கதையைக் கூறி, பழியை மற்றொருவர் மீது போட்டுத் தப்ப முயல்கிறது.

எப்படியாவது வருமானத்தைப் பெருக்கியாவது, இலாபம் தரும் தொழில்களைத் துவக்கியோ, அரசாங்கத்தை வற்புறுத்தியோ நகரைச் சீர்படுத்த முனைய வேண்டுமல்லவா? ஏன் செய்யவில்லை.

சென்னை நகரசபை ஆதரவில் 30 பள்ளிக்கூடங்கள் நடைபெறுகின்றன. ஆனால், அவற்றில் பெரும்பாலானவற்றில் 5-வது படித்துத் தேறிவரும் மாணவர்கள் வெளிப் பள்ளிக்கூடங்களில் ஒன்றிருவர் தவிர பலர் 6-வது வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படக் கூடியவர்களாக இல்லை.

எனவே, இவ்வாறு எண்ணிக்கையில் ஏராளமாகப் பள்ளிக்கூடங்களைக் காட்டிவிடுவதில் பயன் என்ன? சிறுவர்களை நல்ல முறையில் பயிற்றுவிக்கும் பள்ளிக்கூடங்களாக அவை மாற்றப்படவேண்டும்.

இவற்றிற்கெல்லாம் செலவுக்கான பணத்தைப் பெறவும், கல்வித்துறையை ஒரேயடியாக அரசாங்கத்திடம் வற்புறுத்தியேனும் ஒப்படைக்கவும் சென்னை நகரசபை முன்வரவேண்டும். அப்படியில்லையெனின், சென்னைநகரசபை இருந்தும் இல்லாமற் போயினும் இரண்டும் ஒன்றுதான் என்றே ஆகும்.

## ஈயாதான்

### முதல் அமைச்சர் கூறியது தவறுகிறது

டாலருடன் நம்நாட்டு நாணய மதிப்பைக் குறைத்துக் கொண்டதால், விலைவாசிகளோ, வாழ்க்கைச் செலவோ எவ்வகையிலும் அதிகரிக்கமாட்டா என்று இந்தியாவின் முதலமைச்சர் கூறினார். அவர் கூற்றை ஒட்டி கிராமபோன் பிளேட்டுகளைப்போல, சென்னையில் உள்ள தலைவர்களும் அமைச்சர்களும் பிரசாரம் செய்தனர். இவர்களனைவரும் எவ்வளவு கூறியும் வர்த்தகர்கள் தங்கள் வேலையைச் சிறிதும் விட்டுக் கொடுக்காமல் செய்து வருகின்றனர்.

அதற்கேற்ப, டாலர் நாணயச் செலவாணியின் மதிப்பைக் குறைத்துள்ள நாடுகளெல்லாம், அடுத்த சிலமாதங்களில் வாழ்க்கைச் செலவு உயர்ந்துவிடுமென்று ஐ. நா. ஸ்தாபனம் எச்சரிக்கை விட்டுள்ளது. அதாவது டாலர் பிரதேசங்களிலிருந்து பல பொருள்களை வாங்க வேண்டிய அவசியத்திலுள்ள நாடுகளில் முக்கியமாக வாழ்க்கைச் செலவு உயரும் என்று தெரிகிறது.

## முற்போக்கிற்கு முட்டுக்கட்டையிடும் மந்திரி

இந்துக்களிடையே பலதாரத் தடை, விவாகரத்து உரிமை முதலியவற்றினைச் சட்டபூர்வமானவைகளாக ஆக்கி விடுவதற்குரிய முயற்சி மத்திய மாகாணச் சட்டசபையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, உள்நாட்டு மந்திரி பண்டிட் டி. பி. மிஸ்ரா இம்முயற்சியைக் கடுமையாக எதிர்த்து, இது இந்து மதத்தைப் பெரிதும் பாதிக்கிறதென்றும் சமூக அடிப்படை விதிகளை மாற்றி விடுகிறதென்றும் கூறினார். மற்றொருவர், கைத்தொழில் மந்திரி சமூக மாறுதல் விரும்பத்தக்கதுதானென்றாலும் சட்ட மூலமாக இவற்றினை வற்புறுத்தித் திணிக்கக்கூடாதென்று பேசினார்.

இத்தகைய நோக்கம் படைத்தவர்கள் காங்கிரஸ் பெயரைக் கூறி மந்திரிப்பதவி வகிப்பவர்களே யாவர்.

இவர்கள், பழைய கட்டுப்பெட்டிகளாய், சனாதனதர்மம் ஓரங்குலமும் பழுது படாமல் அப்படியே நடைமுறையில் இருந்து வர வேண்டுமென்று விரும்புகின்றார்கள். மந்திரிபதவி பெறக்கூடிய அளவுக்குப் பிரபலம்பெற்ற இந்தக் காங்கிரஸ்வாதிகளே இப்படி முற்போக்கிற்கு முட்டுக்கட்டையிட்டால், இவர்கள்வசம் விடப்பட்ட ஆட்சி எவ்வாறு நடைபெறும் என்பதைக் கவனியுங்கள். காங்கிரஸ் போர்வை போர்த்துக்கொண்டுள்ள இந்தச் சனாதனிகள் காங்கிரஸ் பெயரைக்கூறியே தங்கள் காரியத்தைச் சாதிக்கின்றனர் என்றே கூறுதல் வேண்டும். இதேபோலக் காங்கிரஸ் போர்வையில் சனாதனத்தை மக்களிடை வற்புறுத்தி பரப்பும் ஆசைகொண்டுதான் ரா. சு. சே. சங்கத்தைக் காங்கிரஸ் ஏற்றுக்கொண்டிருக்கிறது. காங்கிரஸ்காரர்கள், சிலர் தவிர, பெரும்பாலோர் உச்சி முதல் உள்ளங்கால் வரையில் பண்டிட் டி. பி. மிஸ்ராக்களாகவே உள்ளுக்குள் தோன்றுகிறார்கள் என்பதை நாட்டு மக்கள் நினைவில் வைத்து இனியேனும் காங்கிரஸ் விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று விரும்புகின்றோம்.

# மாலை மணி

சென்னை 10—10—49 திங்கட்கிழமை


# படைப் பயிற்சி!

'அவன்' அருளைப் பெற்று—ஆத்ம சக்தியின அருமை பெருமைகளை விளமபி நின்று—அகிமசை அரசை நிலை நாட்டி—அவனியிலே அரியவொரு எடுததுக்காட்டாக இந்திய அரசாங்கம் 'திகழுமோ' என்று, எணணியதுண்டு, ஆளவநதார்களின் 'அகிம்ஸை வேதாநத' அறிவுரைகள் கிளமபும அவ்வப்போதெல்லாம்.

'அகிம்ஸை' எனற சொல்லிலே ஏதோவொரு 'அர்த்தப் பூஷ்டி'-'கட்வுள்' எனறசொல்லிலே மககள் 'கொணடிருப்பது' போன்று இருககிறது எனறு கருதி, கூறி வருகிறார்களேயல்லாமல — நடைமுறைக்கு அது சரிப்பட்டுவருவதிலலை — நடைமுறையிலே அதற்கு அர்த்தமிருப்பதில்லை — நடைமுறையிலே அதற்கு ஆதரவு கொடுகக முற்பட்டாலும பொருநதுவதில்லை! அகிம்ஸை, சூழ்நிலை — மனப்போககு இவைகளின மாறறததால் தானாகஉருவானாலொழிய, மனிதனுடைய வாயப பேச்சினால் மட்டும் உருவாவதில்லை. 'அழகு'வேண்டுமானால்சொட்டககூடும்! காங்கிரஸ ஆளவநதார்கள், 'அகிமஸையில்' அதிக அக்கரை காட்டுபவர்கள்போல் நடிககிறார்கள்! அகிம்ஸையைப் பறறி அதிகம் பேசித்தீர்ககாத ஆட்சியாளாகளால், நடைமுறை உலகில எவவளவுதூரம அகிமஸையைககாட்ட முடிகிறதோ, அவ்வளவு தூரமதான அகிம்ஸை பசுபவர்களாலும் காட்ட முடிகிறதென்றால், அகிம்ஸை பேசுவதில அர்த்தமென்ன இருக்கமுடியும். அகிமஸை பற்றி 'வீராப்பு' பேசாத வெள்ளைககார ஆட்சியில 'ஹிம்ஸை'யின அறிகுறிகள் எவ்வளவு காணப்பட்டனவோ, அந்த அளவோடுகூட நிற்காமல, 'ஹிமஸை'யின் சாதனங்கள் 'அகிம்ஸை' பேசித்திரியும் காங்கிரஸ் காரர்கள் ஆட்சியில, அதிகமாகக காணப்பட்டால், 'அகிமஸை'ககு நடைமுறையில அர்த்தமிருககிறது என்பதை, ஆயந்துணரும் ஆற்றலுடையோர் யாரேனும் ஒப்புக கொளவார்களா? 'அகிமஸை' என்ற சொலலுககு மதிப்பு இருககிறது; ஆகவே அதைச சொல்லிக்காட்டுகிறார்கள், "சொன்னதைச் சொலலுமாம் கிளிப்பிள்ளை" என்பது போல! அவ்வளவுதான!

'அகிமஸா' வீரர்கள், அகிமஸைககு இலட்சணம கூறிக கொணடுவநத போதெல்லாம், 'அகிமஸை' ஆட்சியில போர் இருககாது; போர்ப்படைக கலங்கள இருககா; படைக கலப் பயிற்சி இருககாது; போலீஸ் துப்பாக்கி இருககாது; குணடாநதடி இருககாது; பீரங்கி வெடியோசை இருககாது; அடககுமுறை இருக்காது; ஆட்கொல்லிச் சட்டம் இருககாது; தகளி—கைராட்டை— சத்தியம் — அகிம்ஸை, இவைதான இருககும் என்று சொல்லி மககளை நமபவைததனர். "ஹிமஸை இருக்கக் கூடாது" என்று சொல்வதிலே வேண்டுமானால அர்த்தங்கொள்ள முடியுமேயலலாமல், "ஹிம்ஸை இருக்காது" என்று கூறுவதிலே பொருள் பொதிந்திருக்கநடைமுறைஉலகியல்சூழ்நிலைஇடங்கொடுககவில்லை என்று கூறி வந்தோம. காங்கிரஸ் 'வேதாந்திகள்' ஆட்சிப பீடம ஏறிய பிறகுதான, 'அகிமஸை'யை நழுவ விட்டுவிட்டு, 'ஹிமஸைக்'குரிய படைக்கலங்களையும், நீர்-நிலம்-வான போர்ப படைகளையும, பெருவாரியாகத் திரட்டும் பணியில ஈடுபட்டுள்ளனர். நாட்டை 'ஆத்ம மீகச சக்தி' பாதுகாககாது, ஆயுதப்படை பலமேதான காபபாற்றும் எனபதை அறிந்து, படைப பயிறசிக கலைககழகம் திறககும் பணியில முனைந்துள்ளனர் விரும்புவது 'அகிம்ஸை' என்றாலும, கடைசி வரையில், இன்றைய உலகில் அதை மட்டுமே நம்பி வாழ்ந்துவிட முடியாது, நாட்டைப் பாதுகாகக 'ஹிமஸைக' கருவிகளையும் தேடிக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது என்பதை உணர்ந்தார்களே, அதுவரையில் மகிழ்ச்சிதான். 'அகிமஸை' பேசுவதற்கு நல்லது; ஆனால் நடைமுறைககு முழுவதுககும் பயனபடுவதில்லைஅதனால் 'ஹிமஸை'யே வேண்டும என்று நாம் கூறுவதாகப் பொருளபடுத்திக கொண்டுவிடவும் முடியாது; கூடாது!—ஹிம்சையை ஹிமஸையாலதானே ஒழிககமுடிகிறது!

பூனாவுககருகில படைப் பயிறசிக கலைக் கழகம் ஒன்றிறகுப் பண்டிதநேரு அடிப்படைக கலநாட்டு விழாவினை சின்னாட்களுககு முன் நடத்தி வைததுள்ளார். இநதியத் துணைக கண்டத்திறகுத் தேவையான அளவு திறனுள்ள பாதுகாபபுப் படை இல்லை-அதுவேண்டும, எனற கருத்துடைய நாம, படைப் பயிறசிக கலைக கழகம் நிறுவும முயறசியைப் பாராட்டத்தான் செயகிறோம. 'அகிமஸை'யின்மீது அதிக அளவு மோகங கொணடிருபபோருககு வேண்டுமானால், 'படைப்பயிற்சி' என்ற சொற்றொடர் வேம்பென கசக்குமேயொழிய, சூழ்நிலைக கேற்றபடி தக்கப்பாதுகாப்பு வேணடும எனபதிலே கருததுடைய நமககு அது அவசியமுள்ள ஒரு முயறசியாகததான படுகிறது.

அப்படி எடுத்துககொளளப்படும் முயறசி நனமுயறசி என்று ஏற்றுககொண்டாலும, அதன உள பொதிநதுகிடக்கும் உணர்ச்சி திராவிடத்தைத் தேயவைப்பதாக இருக்கிறது.

திராவிடம் வெள்ளையர் காலத்திலும் புறககணிக்கப்பட்டது; அவர்கள் அகன்ற பிறகு வடநாட்டாரின் ஏகபோக ஆட்சியாலும் புறககணிக்கப்பட்டு வருகிறது.

வடநாடு, பலவேறு வெளிப படையெடுப்புகளை எதிர்த்துச் சமாளிகக வேண்டியிருநதது; பெரும்பாலான படையெடுபபுகளில் தோலவியுற்று அவைகளுக்குப் பணிந்து விடவும செய்தது. ஆனால திராவிடமோ எனில வரலாற்றின் பல நூற்றாண்டுகள் வரை, ஆயுதப்படையெடுப்புக்கு இடமளிக்காமல், அவற்றை எதிர்த்து, முறியடித்துத் துரத்தி விட்டுத் தன்னந தனியாக நின்று தன்னாட்சி கொண்டு விளங்கி வந்திருககிறது.

போர்ப்படை மறவர்கள் பெருகி வாழ்ந்த இடமதான் திராவிடம; வெள்ளையர்களால் அந்தப் பணபு மறககடிக்கப்பட்டது, சீககியர்களையும, கூர்ககர்களையும், பஞ்சாபிகளையும, அந்தப் பண்புடையவா என்று உயர்த்தி வைத்துத், தனிச் சலுகைகள் காட்டபபட்டுவந்த காரணத்தால் தென்னாட்டில் சிற்றூர்ப் பககங்களில் சுற்றிப் பார்த்தால், போரப் பணியாற்றும், உடலுறுதியும், உள்ள உரமும் கொணட எத்துணையோ இலட்சககணககானவர்களைக் காண முடியுமே!

ரங்கூனிலிருந்து ரைன் நதிக் கரைவரையிலும போர்க்களங்களில, சென்றஉலகப்பெரும போரினபோது, தென்னாட்டவர் — சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர்கள திறமபடப் போரிட்டிருக்கின்றனர் என்பதைப் பலரும் சிறப்பித்துச் சொல்கிறார்கள். காஷ்மீர் களததிலும சரி, ஹைதாராபாத முற்றுகையிலும் சரி தெனனாட்டுப போர் வீரர்கள் திறமபட செயலாற்றியுளளனர் எனறு அனைத்திந்திய அரசாங்கமே கூறுகிறது. இவ்வளவு இருநதும இங்கே படைப் பயிறசிக கலைக கழகம நிறுவப்படவில்லை, ஏன!

இங்கே போர்புரியும பணபுடைய திணடோளவலியினரும்-திறனுடை நெஞ்சினரும் மட்டும இருககிறார்கள என்பது மட்டுமலல, வசதிகளும் ஏராளமாக இருககின்றன. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலே உள்ள ஒரு சில போர்ப் பாசறைகளில், ஒன்றுதான் சென்னைககு அருகாமையிலுள்ள ஆவடிப்பாசறை. அது அகில உலகத்திலே சிறநத ஒன்று, அனைத்திந்தியாவிலும மிகப பெரியது. அதறகு இணை இந்தியாவில் எஙகணும கிடையாது. அது 40 சதுரமைல் சுற்றளவுடையது என்று சொல்லப்படுகிறது. போர்ச சாதனங்களைஉறபததி செய்து தருவதறகென்று, பணிபுரிவோா மட்டும 50,000 பேர்கள இருந்தனராம். கோடிக கணககான விலைமதிப்புடைய இயநதிரங்கள இருககின்றன. இப்படிப்பட்ட ஆவடிப பாசறையைத் தேயவைககும முயறசி, வடநாட்டவாகள நிரமபிய பாதுகாப்பு இலாகாவால செயயப்படுகின்றது. இது தகுமா, முறையா, தருமந்தானா என்று கேட்க 'வாயுள்ள' தென்னாட்டுப் பிரதிநிதிகள் யாரும இல்லை! என்னே பரிதாபம்! ஆவடி என்றொரு போர்ப் பாசறை இருக்கிறது. அங்கே இவ்வளவு சிறப்புபொதிநது கிடககிறது, அது தேயவைககப்படுகிறது, என்று உணர்வார் ஒருவர்கூட, தென்னாட்டுப் பிரதிநிதிகளிலே இலலாதது, ஏங்கி, ஏங்கி இரங்கத்தகக நிலையிலே ஒன்று தான!

ஆவடியில் வேலைசெய்த பணியாளாகள் 50 000 என்பது, 5000 ஆகத் தேயவைககப்பட்டிருக்கிறதாம. இது போன்று, ஆனால்இதை விடச் சிறியனவாக, வடநாட்டிலிருக்கும போர்ப்பாசறைகளில பணிபுரிவோரின எண்ணிககைக் குறைககப்பட்டிருக்கிறதா, என்றால், இல்லை! இங்கு மட்டும் ஆட்களைக் குறைத்து, அவர்களை வீட்டிற்கனுப்பவதற்குக் காரணம, ஆவடிககிருககும அருஞ்சிறப்பைப் பாழாகக வவ்லாமல் வேறென்னவாக இருக்க முடியும்?

ஆட்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டு விட்டனர்; ஆனால ஆவடியில் அவர்கள் வேலை செய்திருநது, விட்டுவிட்டு வந்த விலைமதிப்புடைய இயநதிரங்கள், கடுங்காற்றுக்கும், பெருமழைக்கும், கொடும வெய்யலுக்கும் இரையாகிப் பாழபட்டுவருகின்றன. இவைகளைப் பயன்படுத்தும் முறையில் ஏன ஆவடியில எளிதில-சுளுவாக ஒரு படைப்பயிற்சிக கலைககழகததைத தோற்றுவிக்ககூடாது? தென்னாட்டவர் படை பலம பெறக் கூடாது எனபதுதானே! மேலும ஆவடியிலுள்ள இயநதிரங்களில சில நாளாகவாக பூனாவிற்கும், மறற பல இடங்களுககும ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்றும சொலலப்படுகிறது இநதச செயலும். நாம மேலே எடுத்துக காட்டிய கருத்திறகு வலிவூட்டுவதாகவே அமைநதிருககிறது. மேல்நாட்டு நிபுணர் ஒருவர். கோவைக கருகில ஒரு சிறந்த ஆகாய விமானப படைத் தளததை உருவாககலாம, அது அகில உலகததிலும சிறப்புப பெற்றதாக இருககும எனறு கூறினாராம். தென்னாட்டிறகு அதனால பலம ஏறபடுகிறது என்று கருதியோ என்னவோ, அந்த யோசனை எடுததுக கொளளப்படவில்லை என்று சொல்லிககொள்ளப்படுகிறது.

இவை எல்லாவற்றையும ஒன்றுசேர்த்துவைததுப் பார்ககும்போது, பாதுகாப்புக்கென்று அனைத்திந்திய அரசாங்கம் செய்யும் முயறசி எல்லாம தென்னாட்டைப் புறககணித்து, வட பகுதியை வலிவுள்ளதாக ஆககிக கொளளத்தானோ என்ற எண்ணம் இடமேறபடுகிறது.

பாதுகாப்புக்கென்று சொல்லித் திரட்டும் படை, பாதுகாப்புககாக மட்டுமே நிறபதில்லை. சில வேளைகளில அகராடககாரர்களின் தூண்டுதலால ஆக்ரமிப்புககும பயன்படுத்தப்பட்டு விடுவதை வரலாற்றுச சான்றுகளிலிருநது அறிகிறோம.

ஆகவே, திராவிடம்பாதுகாககப்பட, வேறு எநத நாட்டிறகும அடிமை யாகாமலிருகக வேண்டுமானால, பாதுகாப்புப்படை வேண்டுமா, வேண்டாமா, படைப் பயிற்சி வேண்டுமா, வேண்டாமா எநத அளவுககுத் தேவை, எப்படித் தேவை, எந்த வகையில தேவை என்று ஆயநதுணாநது நடநதுகொளளககூடிய வாயப்பு திராவிடத்திறகு இருகக வேண்டும். அதறகுத் திராவிடம் இநதியத் துணைககண்டததின ஒரே ஆட்சிப்பிடியிலிருநது விலகி நினறால்தான இயலும்!

## பிரிந்தார் பேரறிவாளர்

ஆளவநதாரகளின அடக்குமுறைகளுககு ஆட்பட்டு, வழககு மன்றம் காணாது, சிறைகளில் வாடிககிடககும், பல இளங்காளைகளுககாக, நீதி மன்றங்களிலே நின்று, ஆணித்தரமான சட்ட நுணுக்கங்களை கொட்டிக குவிதது, உரிமைககுப் போராடி வந்த உரிமைக் கனல், தணிந்து விட்டது என்ற அவச்சொல் கேட்டால், அஞ்சா நெஞ்சர்களுக்கும் மனககலககம் ஏறபடுவது இயறகையேயாகும். 'எம் உரிமைக்குப் பரிந்து பேச இனி எவர் உளர்' என்று எணணம் தோனறித் தோனறி, நம்மைத் துடிக்க வைககிறது, தோழர் ஏ. கே. பிள்ளை அவர்களின் எதிர்பாராப பிரிவு

வெளிச்சததின மத்தியிலேயே வீற்றிருககப் பார்த்துக் கொள்வதுதான், பொது வாழ்வில புகுவோர்களின் பெரும கோட்பாடாக இருக்க வேண்டும என்ற, புகழ் தேடும் விபரீத மனோபாவத்திறகு, தோழர் பிள்ளை அவர்களின் மனவளம நேர்மாறானதாகும். அவர் ஒரு முதல் தரமான சிநதனையாளர். அவருடைய ஆங்கிலக கட்டுரைகள், அவருடைய நூறபுலமையும், வாதத்திறமையும, அனுபவ உணமையையும விளககிக் காட்டுவனவாகவே இருக்கும்.

இங்கிலாநதில், 1924-ல், பாரிஸ்டர் பரிட்சைககாகப் படித்துக்கொண்டு இருக்கும்பொழுது, காந்தியாரின் லட்சியததிறகு இணங்க, கல்லூரிப்படிப்பைப் பாதியிலேயே விட்டுவிட்டு, காங்கிரஸ் பணிபுரிய முனைநதார். சில ஆண்டு கழித்து, மீண்டும் இங்கிலாநது சென்று பாரிஸ்டர் பரிட்சையில தேறி, தாய் நாடு திரும்பி, நீதிமன்றததில் நீடித்தப புகழ்பரப்பி வநதார்.

பின்னர் காந்தியாரோடு ஏறபட்டக கருத்து மோதுதலால், காஙகிரசை விட்டு விலகி, தோழர் எம். என். ராய அவர்களுடன ஒன்றுபட்டு, தீவிர ஜனநாயகக கட்சியைத் துவககித் தொண்டாற்றி வநதார். தொழிலாளர்கள நலமகருதி அவர் ஆற்றியத் தொணடைக காட்டிலும, எழுத்துரிமை பேச்சுரிமை முதலிய உரிமைககாப்புககுக கட்டாற்றியதைக் குறைவானது என்று மதிப்பிடுவதறகில்லை.

இத்துணைக் கண்டத்துககு இன்றியமையாதனவாகத் தேவைபபடும், எலலாத் துறைகளிலும பணிபுரிய, அறிவியல் பணியாளர்களைத் தோறறுவிப்பதில, தோழர்

# 'குணத்தோடு பழகாத...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இயற்கை அதுதான் முறையும் கூட. ஆனால், 'அதிகாரம்' அணுவளவும் இருக்க அருகதையற்றப் பக்கிரி, காலத்தை அனுசரித்து பிச்சைக் கேட்கும் சொற்களுக்கு, ஆணவத்தை ஊட்டுகிறான். நமக்கு இது பிடிக்காததாகத் தெரிகிறது.

அதிகாரம்,-மக்களின் நலம் கருதிப் பெற்றுக்கொண்டு இருக்கிறோம் என்று, நமது துரைத்தனத்தார்கள், நாள் தவறாமல் கூறிவருவதைக் கேட்டுக்கொண்டு இருக்கிறோம் பார்க்கிறோம், அதிகாரம், நாட்டிலே, ஒவ்வொரு நாளும் புரிந்துவரும் திருவிளையாடல்களை படிக்கிறோம், பாட்டாளிகள் மீது, பாயும் புலியென, நிமிஷத்துக்கு நிமிஷம் பாய்ந்துவரும் பயங்கரச் சட்டங்களை, பிறர் சொல்லக் கேட்கிறோம், மாறுபட்டக் கருத்தினருக்கு, நமது சர்க்கார் ஒன்றன் பின் ஒன்றாக இழைத்துவரும் இடுக்கண்களை. 'ஆகுமா இந்தப்போக்கு' என்று குணசீலர்கள், கொஞ்சு மொழியில், கோலோச்சிகளைக்கெஞ்சிக் கேட்பதை தினம் தினம் செய்தித்தாள்கள் தாங்கிவருகின்றன. 'சர்வாதிகாரர்கள்' என்று ஆளவந்தார்களை அர்ச்சிப்பதையும், அறிவித்த வண்ணமிருக்கின்றன தினசரி இதழ்கள். 'பாசிசப் பாதை வழி பாராள்வோர் போவது பொருந்துமா மக்களாட்சி முறைக்கு' என்று முன்னாள் கூட்டுத்தோழர்கள் எழுப்பும் அழுகுரலும் நூலாக்கப்பட்ட வண்ணமிருக்கிறது. 'சுயாட்சி, சுகவாட்சியாக மாறவில்லையே' என்று சோகக்குரல் நாடெங்கும் கிளம்பும் நிலை இருக்கிறது. இவ்வளவு அலங்கோலங்களுக்கும்-உரிமை பறிக்கும் படலங்களுக்கும் — ஆளவந்தார்களின் அடக்கு முறைகள், கோரவிளையாட்டில் ஈடுபட்டு இருக்கின்றன; ஏழை மக்களிடை!

'முதலாளிகளிடம் — ஆலை ஊரார்களிடம் — பணமூட்டைகளிடம்—பெட்டிப் பாம்பாகின்றன, பயங்கரச் சட்டங்கள், போலீஸ் பட்டாளம், ஆட்சியாளர் கைகளிலுள்ள அதிகாரம்! குணத்தோடு பழகாத மாந்தர்களிடம், ஏன் இந்தக் கொஞ்சலும் கெஞ்சலும் கோலோச்சிகளுக்கு?

பேச்சுரிமை எழுத்துரிமை பறிக்கப்படக்கூடாது என்று இதமாகப் பேசுகிறவர்களையும், உள்ளே தள்ளி இழுத்துப் பூட்டும் சிறைச்சாலைகள், ஏற்க மறுக்கிறதா, சர்க்காருக்குச் சேரவேண்டிய வரிப் பணத்தைக் கொடுக்க மறுக்கும் ஆலை 'அரசு'களை? வரிகொடா இயக்கமா அவர்கள் நடத்துகிறார்கள்? இல்லையே!

போர்க்காலத்திலே ஒன்றுக்கு ஒன்பதாக விற்று, தனக்கு— வீட்டுக்கு — நாட்டுக்கு — சர்க்காருக்கு—என்று வெவ்வேறாக —விதவிதமான பொய்க் கணக்கெழுதி, கிடைத்தக் கொள்ளைலாப மொத்தத் தொகையை, சர்க்காருக்குச் செலுத்த வேண்டிய வரிப் பணத்தையும் கொடுக்காமல், பணமூட்டையைப் பதுக்கி வைத்திருப்பவர்கள், பணம் காத்த 'பூதம்' மட்டும் அன்று, உலகத்திலுள்ள சகல அற ஒழுக்கங்களையும் அழித்துக் கட்டியக் கயவர்களாவா! பொது மக்கள் மனத்தில் கொலு வீற்றிருந்த காலை — புதுடெல்லியில குடியேறுவதற்கு முன்னர்-'இப்பாதகர்களைத் தூக்கிலிடவேண்டும்' என்று கர்ஜித்தார் ஜவஹர் என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது! 'தூக்கிலிடவேண்டும்' என்று, அளவு கடந்த ஆத்திரத்தோடு ஆசைப்பட்ட அதே பண்டிதர்தான், அறத்தின் நீங்கினரை, நியாயமாகச் செலுத்த வேண்டிய வரித்தொகையைச் செலுத்தாத வன்னெஞ்சர்களை, பணப்பெட்டிகளை, அதிகாரம் இருக்கும் பொழுது தூக்கிலிடுவதற்குப் பதில, வலம்வந்து, இரு கைகளையும் பிசைந்து கொண்டு, குழைந்து குழைந்து கோரிக்கையாக்குகிறார், மனக்குறையை! என்ன அவசியம் இதற்கு?

யாசகமா கேட்கிறார் பண்டிதர். பணமூட்டைகளைப் பார்த்து? சர்க்காருக்குச் சேரவேண்டிய வரிப் பணத்தை மட்டுமா கேட்கிறார், பண்டிதர்?

■ பொய்க் கணக்கெழுதினர்!

■ கள்ளத்தனமாகச் சம்பாதித்தனர்.

■ மொத்த லாபத்தைக் காட்ட மறுத்தனர்.

■ வருவாய்க்கு ஏற்ப வரி கொடுக்காமல் இருந்தனர்

■ செலுத்தவேண்டிய காலத்தையும் கடந்துவிட்டனர்

■ மேலும் மேலும் அந்தப் பணத்தைக் கொண்டு கள்ள மார்க்கெட் செய்கின்றனர்.

■ நாட்டின் பொருளாதார நெருக்கடியை தினம் தினம் பெருக்கி வருகின்றனர்.

■ சர்க்காரை ஸ்தம்பிக்கச் செய்கின்றனர்.

பணமூட்டைகள் புரிந்த புரியும்-புரியக் காத்துக்கொண்டிருக்கும் இவ்வளவு 'ஒழுக்க'மானச் செயல்களையும், பண்டிதர் ஜவஹர் அறிவார்! வெறும் மோதிலால் நேஹ்ருவின் புதல்வராக இருக்கவில்லை ஜவஹர்! பாராளும் நமது பிரதமர்!

அதிகாரம் இருக்கிறது. இந்த நாட்டு விரோதிகளை—முன்னாள் தம் விருப்பப்படி இன்று தூக்கிலிட்டு, நாட்டு மக்களுக்கு நலம் புல சேர்க்க, அவருக்கு. ஆனால், பணிகிறார். இதம் கூறுகிறார், 'தண்டனை' கிடையாது என்று வாக்குறுதியும் அளிக்கிறார்.

பொய்வெளியாக்கப்பட்டால்-கள்ளத்தனம் கண்டுபிடிக்கப்பட்டால்-பணம் பறிமுதலாவதோடு, கொடுந்தண்டனையும் கிடைக்குமே என்ற அச்சம் இருந்த பொழுதே, நீதிப்பாதையில்— நேர்மை வழியில் — நாட்டம் செலுத்தவேண்டுமே என்ற நல்ல நோக்கம் கொள்ளாத இந்த 'நல்லவர்களா' 'தண்டனை' இல்லை யென்ற வாக்குறுதிக் கிளம்பிய பின்னர், அறத்தன்மையை அடைவர்? சாரமற்றப் பேச்சு!

ஆங்கிலேயர் ஆட்சியில், முதலாளிகள் செய்து வந்த இந்த அநியாயத்திற்கு, நல்ல நாட்டுப்பற்று, தேர்ந்த தேசியம், என்று தேசியத் திருநாவால் தோத்திரிக்கப்பட்டு, இந்தப்பணசீலர்களின் பாதுகாப்பிலேயே தேச விடுதலை இயக்கம் நடைபெற்று வந்ததின், பயங்கர விளைவு இது. சுயாட்சியிலும் அந்த நிலை, கோடாலி கொண்டு பிளக்கவேண்டிய தன்மையைப் பெற்றுவிட்டு இருக்கிறது. கோடாலி யெடுப்பதற்குப் பதில், குறைகளைக் களைய, கோரிக்கையைக் கையிலெடுக்கிறார், நமது பிரதமர் பண்டிதர்! நகத்தைக் கூட, இந்த விரும்பத்தகாத விபரீதத்தைப் போக்க, பயன்படுத்தப் போவதில்லை என்று, பணமூட்டைகளுக்குப் பாதுகாப்புத் தருகிறார். பலன் ஏற்படுமா?

இந்த வரித்தொகை நிலுவை மொத்தம் 300 கோடி ரூபாய் இருக்குமாம்! கொஞ்சமா நஞ்சமா? எங்கே பதுக்கி வைத்திருக்கிறார்கள்-எந்த ரூபத்திலே வைத்திருக்கிறார்கள் — என்று தெரிந்துகொள்ள முடியாமல, நிதி மந்திரி மத்தாய், திறமையாக நடித்துக்காட்டுகிறார்! பிரதமர் பண்டிதருக்காவது, பணமீட்டும் தொழிலின் பற்பல முறைகளும் தெரிந்திருக்க நியாயமில்லை. நிதிமந்திரி மத்தாய் ஒரு தொழில் அரசராக இருந்து அனுபவம் பெற்றவர். அவர், நேர்மையின் உருவாக இருந்த போதிலும், பிரதமருக்கு இல்லாத ஒரு வாய்ப்பு, அதாவது சிலபல பணமூட்டைகளைச் சந்திக்கும் வாய்ப்பு, அவர்களுடைய வர்த்தகத் தந்திரங்களை யெல்லாம் தெரிந்து கொள்ளும் சந்தர்ப்பம், மத்தாய் அவர்களுக்கு உண்டு. இருந்தாலும், பிரதமரோடு சேர்ந்து, மத்தாயும் கவலைப்படுகிறார், எங்கே, எந்த உருவில், வரி கொடுக்காமல் கள்ளமார்க்கெட்டில் சேர்த்து வைத்த பணம் பதுங்கி இருக்கிறது என்று!

கவர்னர்-ஜெனரலுக்கு இருக்கும் விசேஷ அதிகாரம்-சட்ட நூற்களில் நிறைந்து இருக்கும் சட்டமில்லா சட்டங்கள்-அவைகளை நிறைவேற்றும் அதிகாரிகள்-அவர்கள் ஏவின வழி நடந்து கொள்ளக் கடமைப்பட்டுள்ள போலீஸ் படையினர், ஆகிய அனைத்துக்கும், வேறு பணி இருக்கிறபொழுது, இந்த வரி கொடுக்காத அக்கிரமக்காரர்களின் கொட்டத்தை அடக்க, அவைகளுக்கு அவகாசம் எங்கே கிடைக்கப்போகிறது? எனவே, ஐயோ பாவம்! பிரதமர் கனல கக்குவதற்குப் பதில், குழைவு கொள்ளுகிறார், ஒழுக்கின கோபுரத்தில் நிற்கும் கோமான்களிடம்!

அக்கிரமம் — பணமூட்டைகள் புரிந்தால் — தண்டனை இல்லை!

அநீதி—முதலாளிகள் இழைத்தால்—தண்டனை இல்லை!

வரிகொடாமை—வர்த்தகச் சீமான்கள் செய்தால்—தண்டனை இல்லை!

**பண்டிதரின் புதிய கோல் முறை!**

பிரதமர் — தொழில் அரசர்கள் முன்—நமக்கிருக்கும் பதவியை மறக்கிறார்—வெறும் பக்கிரியாகிறார்! பக்கிரியிடம் காணப்பட்ட, மிடுக்குக்கூட இல்லை பிரதமரின் பேச்சில்! வீட்டுக்குடையாள் ஆகிறார்கள், வரி கொடுக்காது, ஏமாற்றி வரும் வள்ளல்கள்! இந்த நிலை இருப்பதால், நாடு நலிகிறது பலத் துறைகளில் மக்களின் பசிக் குரல் கூடுகிறது!

வெற்றிபெறட்டும் பிரதமரின் விருப்பம் — வேண்டாமென்று நாம் கூறவில்லை—இந்த மகஜர் முறையும் தோல்வியுற்றால் அடுத்த நடவடிக்கை என்ன என்பதுதான் நமது கேள்வி. முன்னாள் புலியாக இருந்தவர் —முதலாளிகள் முன்னிலையில் மட்டும் இன்றுப் புழுவாக மாறி இருப்பவர் — அடுத்தக் கட்டத்திலாவது, புலியாக மாறவில்லையானாலும் பூனையாகவாவது மாறுவாரா என்பதுதான் நமக்கிருக்கும் நியாயமான சந்தேகம்! இத்துணைக் கண்டத்தில நாமும் ஒரு பிரஜை. பிரதமருக்குள்ள உரிமை நமக்கு முண்டு என்ற ஜனநாயகக் கோட்பாட்டோடுதான், இந்தச் சந்தேகத்தைக் கேட்கிறோம்.

---

பிள்ளை அவர்களுக்கு அதிக ஆசை இருந்தது. அதற்கானத் தொண்டினை ஆர்வத்தோடு, தன்னால் முடியும் வகையில் செய்துவந்தார் சிறை வாழ்வுக்கு அஞ்சியல்ல, அவர் இப்பணியினை ஏற்றது. காங்கிரசில இருந்த போது சிறை வாழ்வை மகிழ்ச்சியோடு ஏற்றவர், பின்னர், அதற்காக அஞ்சி, வேறு பாதையைப் பொது வாழ்விற்கென வகுத்துக் கொண்டார் என்று எவரும் கூறத் துணியார். மக்களாட்சி முறை வெற்றி பெற, மக்களின் அறிவியல் தரமும் உயர்ந்திருக்க வேண்டும என்பது அவருடைய ஆழ்ந்த நம்பிக்கையாகும். எனவே, அறிவியல் பரப்பும் செயலைமேற்கொள்ள வேண்டியவரானார் பிள்ளை.

சிந்தனைச் சிற்பி சிங்காரவேலருக்குப் பின்னர், பரந்த கல்வியும, முறையான சிந்தனைப்பண்பும, சொல்லும்சொற்றிறமும் கொண்டிருந்தவர் தோழர் ஏ. கே பிள்ளை என்பது வெறும் புகழ்ச்சியல்ல. ஐம்பதாவது வயதில், நண்பர் பிள்ளை, மாரடைப்பால, இறந்தார் என்ற செய்தி, நமக்கு வேதனையைத் தந்து விட்டது. பிள்ளை போன்ற பலரைத் தோற்றுவிப்பது தான். நாம், பிள்ளை அவர்கள் சேவைக்குச் செய்யும் கைமாறு ஆகும். அவருடைய குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த துக்கத்தையும அனுதாபத்தையும தெரிவித்துக்கொள்கிறோம.

---

## யார் அக் கயவர்கள்?

"வருமானவரிக் கமிஷனைக் கடையைக் கட்டச் செய்ய மிகுந்த செல்வாக்குப் பெற்ற சிலர் முயன்றதாகவும, ஆனால் சர்க்கார் அதற்கு இணங்கவில்லை யென்றும் தெரிகிறது."

---

## பதவி வேட்டைப் படலம்

### சிறிதுநாள் ஒத்திவைப்பு

சென்னை மாநில அரசாங்கத்தை நிர்வாகம் செய்யும் மந்திரிகள், பிரதம மந்திரிகளை ஆண்டுதோறும் மாற்றும் திருப்பணியைக் காங்கிரஸ் காரியக் கமிட்டிகள் செய்துவந்தன. இதனால் சிலர் நலனும் மகிழ்ச்சியும் பெருமற் போகவில்லை. ஆனால், ஆண்டுதோறும் மாறிக்கொண்டிருக்கும் மந்திரிகள் பற்றிப் பொதுமக்களிடையே பெரும் அருவருப்பு தோன்றிவிட்டது. அதற்கேற்ப, போட்டியில் வரும் மந்திரிப்பதவியாளர், ஒருவருக்கொருவர் ஏசிக்கொண்டும் விஷயங்களை எடுத்துரைத்துக்கொண்டும் காலத்தை வீணிற்கழிக்கும் நிலைமை ஏற்பட்டது. இவற்றை ஒழிக்க, சட்டசபை ஆயுட்காலம்வரை இப்போதுள்ள மந்திரிகள். பிரதம மந்திரிகள் அப்படியே பதவி வகித்துக் கொண்டிருத்தல்வேண்டும் என்று மத்திய காங்கிரஸ் கமிட்டி முடிவு செய்து விட்டது. இந்த முடிவினால் சிலர் மகிழ்வர் சிலர் இலாப நஷ்டக்கணக்கை எண்ணிப் பெரிதும் வருந்துவர். பொதுவாகக் காங்கிரஸ்காரர்களின் பதவிவேட்டை ஊழல் நாற்றம் சற்றுக் குறைதல் கூடும்.

---

## எழுத்துரிமை பேணல்!

எர்ணாகுளத்திலிருந்து வெளியாகும் 'தஸவீர்' என்ற மலையாள சினிமா பத்திரிகையைச்சென்னை சர்க்கார் தடை செய்துள்ளது.

---

# பாம்பிற்கிடங்கொடுத்தால் படையை மாளவைக்கும்

காங்கிரஸ் கட்சியினரும், காங்கிரஸ் ஆட்சிப் பீடத்தினரும் நாட்டிலே கம்யூனிஸ்ட் கட்சி வளர்வதைத் தடைசெய்துவிடக் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு வேலை செய்கின்றனர். சென்னை, வங்காளம் போன்றவிடங்களில் கம்யூனிட் கட்சி சட்டவிரோதமாக்கப் பட்டுவிட்டது.

கம்யூனிஸ்ட் கட்சி பலாத்காரச் செயல்களில் இறங்குவதாகவும, அவர்களுடைய போக்கு நாட்டுக்கு உகந்ததல்லவென்றும் கூறவந்த காங்கிரஸ்காரர்கள், காந்தியாரின் கொலைக்குக் காரணமாயிருந்த ராஷ்ட்ரீயசுயம் சேவக சங்கத்தைக் காங்கிரஸில் சேர்த்துக்கொள்ள அனுமதி அளித்துவிட்டனர்.

கம்யூனிஸ்ட் கட்சியினால் இந்திய மக்கள் பாதகமடைவார் என்பதைக் கண்ட காங்கிரசார் ரா. சு. சே. சங்கத்தினரால் , மனித சமுதாயம பாதகமடையாது என்று முடிவு செய்துவிட்டனரோ!

பொதுத் தேர்தலில் காங்கிரஸ் பெயரையேகூறிக்கொண்டு வெற்றி பெற்று, தக்க பதவிகளைக் கைப்பற்றிக்கொண்டு தங்கள் கொள்கைகளைப் புகுத்தவும், பரப்பவும் ரா. சு. சே. சங்கம் எண்ணியே, காங்கிரஸில் சேர மனுப்போட்டது எனலாம்.

இந்து-சனாதன தர்மத்தைப் பரப்பிவிடலாம் என்று கருதியே இவ்வாறு செய்திருத்தல்வேண்டும. ஒரு பிற்போக்குசசக்தி காங்கிரஸை ஓரளவு கைப்பற்றிவிட்டது என்றே கூறவேண்டும். இன்று காங்கிரஸ் ஒருபுறம் 'முதலாளிகளுடைய 'சட்டை'களுக்குக் கட்டுப்பட்டும், மற்றொரு புறம், சனாதன தர்மக் கொள்கையினருக்குமகட்டுப்பட்டும் வேலை செய்யும் ஓர் இசசக நிலையமாகம் [illegible] விட்டதென்பதில் வியப்பொன்றும இல்லை அல்லவா?

---

## திருமணம்

ஜமீன் ஆலமரத்துப்பட்டி, செப். 9-

இவ்வூர் தோழர் எ. சின்னசாமிக்கும், தேவியார் பசுபதிக்கும், தோழர் எ. ஆறுமுகத்திற்கும், தோழியர் இலட்சுமிக்கும் ஈரோடு தோழர் என். இ. பாலகுரு தலைமையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. இதன் நினைவாக ரூபாய் இரண்டு வரப்பெற்றோம் மகிழ்ச்சி!

# திராவிட முன்னேற்றக் கழகங்கள்

## சென்னை மயிலாப்பூர்—கிளை

சென்னை, அக். 5—

1-10-49 இரவு 9 மணிக்கு மாலை அரங்கனாதபுரம் வீதி 10-ம் எண் இல்லத்தில், மாடி மீது திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. பல தோழர்கள் வந்திருந்தனர்.

அதுபோது திராவிட முன்னேற்றக் கழகம்—மயிலைக் கிளை என்ற பெயரில் கழகம் துவக்குவதென முடிவு செய்யப்பட்டது. பின்னர் செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்— பொன். கு. தண்டபாணி; துணைச் செயலாளர்—சு. இராதாகிருஷ்ணன்; நிதி உறுப்பினர்—கே. செலவராசு; விளம்பர உறுப்பினர் — எ. ஜெயராமன். ஏனைய செயற்குழுவினர் — எம். இரகுநாதன், எ. பெருமாள், கே. சாரங்கபாணி, ஆர். விபீஷணன், மு. பாலசுந்தரம், பஞ்சநாதன். வேறு சில பகுதிகளுக்கும் சிலரைத் தேர்ந்தெடுக்கச் செயலாளருக்கு அதிகாரம் தரப்பட்டது.

17—9—49 ல் சென்னையில் நடந்த கூட்டத்தை ஆதரித்து ஒரு தீர்மானமும், தற்காலிகச் செயலிடமாக 1/10, அரங்கநாதபுரம் தெரு, மயிலாப்பூர், சென்னை-4. என்றிருக்க ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன. என விளம்பர உறுப்பினர் தெரிவிக்கிறார்.

* * *

## காவேரிப்பாக்கம்—கிளை

காவேரிப்பாக்கம் (திண்டிவனம்), அக். 3—

2—10—49 ஞாயிறு இரவு 8-மணிக்குத் தோழர் தங்கவேலு அவர்கள் இல்லத்தில் திராவிடர் கழக செயற்குழுவினர் கூட்டம் தலைவர் தோழர் முத்துசாமி தலைமையில் கூடி "திராவிட முன்னேற்றக் கழகம்-காவேரிப்பாக்கம் கிளை" என மாற்றி அமைக்கப்பட்டது. புதிய செயற்குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:-எம். முத்துசாமி; துணைச்செயலாளர்:—கே. கெங்காதரன்; நிதி உறுப்பினர்:-எஸ். பூபாலன்; விளம்பர உறுப்பினர் :— ஆ. தங்கவேலு.

ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—எ. ரங்கநாதன், எம். தனபால், கே. சுப்பிரமணியம், ஆர். வரதன், எஸ். கோவிந்தராசு, எம். எத்திராசு, சுப்பிரமணியன்.

மேலும் இரு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் இனிது முடிந்தது.

என விளம்பர உறுப்பினர் தோழர் ஆ. தங்கவேலு அறிவிக்கிறார்.

* * *

## தேசுமுகப்பேட்டை-(நடிகர்)கிளை

தேசுமுகப்பேட்டை, அக். 3—

இன்று மாலை 6 மணிக்கு இவ்வூர் பகுத்தறிவுக் கழகக் கட்டிடத்தில் "திராவிட முன்னேற்றக் (நடிகர்) கழகம்" நடிகர்களால் அமைக்கப்பட்டது. கழகத்திற்குச் செயற்குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—எம். எஸ். மணி; துணைச்செயலாளர்:—எம். நடராசன்; நிதிஉறுப்பினர்:-என். மாணிக்கம். ஏனைய செயற்குழுவினரும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

பாமர மக்களைப் பகுத்தறிவுப் பாதைக்கழைத்துச்செல்ல, நாடகக் கலையே மிகவும் சிறந்த சாதனம். ஆதலால் இளைஞர்களின் சக்தியை ஒன்று திரட்டி நாடகக்கலையின் உதவியால் நல்ல கருத்துக்களைப் பரப்புவதே இதன் அடிப்படை நோக்கம் என்று குறிப்பிடப்பட்டது. எனச் செயலாளர் எழுதுகிறார்.

* * *

## நாகமநாயக்கன்பட்டி—கிளை

நாகமநாயக்கன்பட்டி, அக். 4—

3—10—49ம் நாள் கோவை மாவட்டம் நாகமநாயக்கன்பட்டியில், 'திராவிடர் கழகம்' என்று இருந்ததை மாற்றி 'திராவிட முன்னேற்றக் கழகம்—நாகமநாயக்கன்பட்டிக் கிளை" அமைக்கப்பட்டது. கழகக் கொடி பிடித்து ஊர்வலம் வந்து திராவிட முன்னேற்றக் கழகக் கொடியேற்று விழா நடைபெற்றது. பின்னர் செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர் —மு. பழனிசாமி; துணைச்செயலாளர்:-மு. நல்லசாமி; பொருள் உறுப்பினர்:—மா. சு. அங்கப்பர்; விளம்பர உறுப்பினர்:- ப. ராமசாமி.

ஏனைய செயற்குழுவினர்:— மு. குப்புசாமி, மு. வேலுசாமி, வை. நாராயணன், வி. இலட்சுமணன், மா. வைத்திநாதன், மா. குழந்தைசாமி, செ. சின்னப்பன்; ரா. தியாகராஜன்.

எனச்செயலாளர் அறிவிக்கிறார்.

* * *

## நாகரசம்பட்டி—கிளை

நாகரசம்பட்டி, (சேலம்) அக். 5—

நாகரசம்பட்டி திராவிடர் கழகச் செயற்குழுக் கூட்டம் கூடி "திராவிடர் கழகம்" என்றிருந்ததை, "திராவிட முன்னேற்றக் கழகம்—நாகரசம்பட்டிக்கிளை" என அமைத்தது. திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகள் யாவும் தலைவர் நா. சு. சம்பந்தம் அவர்களால் விளக்கப்பட்டது. புதிதாகச் செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—நா. சு. சம்பந்தம்; துணைச்செயலாளர்-பொருள் உறுப்பினர்-இர. சிவப்பிரகாசம்; செயற்குழு உறுப்பினர்கள் பதினைந்து பேர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

"விடுதலை" ஜாமீன் தொகைக்காகச் சேகரித்த ரூ. 101 ஐ திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழாச் செலவுக்காக உபயோகப்படுத்திக்கொள்வதென்றும், மேலும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. எனத் துணைச் செயலாளர் தோழர் இர. சிவப்பிரகாசம் எழுதுகிறார்.

* * *

## சென்னை கோடம்பாக்கம்—கிளை

சென்னை, அக். 6—

5—10—49 மாலை 6-மணிக்குக் கோடம்பாக்கம் திராவிடர் கழக அன்பர்கள் கூட்டம் நடைபெற்றது. "திராவிட முன்னேற்றக் கழகம்—கோடம்பாக்கம் கிளை" அமைப்பது என முடிவுசெய்யப்பட்டு, செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்—எம். இளையபெருமாள் பி. எ., துணைச் செயலாளர் —எம். தேவராசன்; பொருள் உறுப்பினர்—எம். சுப்பிரமணியம்; விளம்பர உறுப்பினர்—மறைமலை.

ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—மகாதேவன்; என். பழனிசாமி, சிட்டிபாபு, டி. ஐயாவு, கே. எ. பாபு, கே. கிருட்டினசாமி எம். எ.,

என விளம்பர உறுப்பினர் அறிவிக்கிறார்.

* * *

## புதுப்பாளையம்—கிளை

புதுப்பாளையம், அக். 3—

26-9-49 திங்கட்கிழமை மாலை 8-மணிக்குத் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம், மாதாகோயில் மைதானத்தில் நடைபெற்றது. புதிய செயற்குழு, உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்- இ. இருசப்பன், கை. கோபால்; பொருள் உறுப்பினர்- ந. சாந்தனை; விளம்பர உறுப்பினர்- ந. முத்துசாமி, சு. சாரங்கபாணி, ஏனைய செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

என விளம்பர உறுப்பினர் தோழர் சு. சாரங்கபாணி தெரிவிக்கிறார்.

* * *

## பல்லடம்—கிளை

பல்லடம், அக். 3—

பல்லடம் திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம், 1-10-49-ல் தோழர் பி. நல்லசாமி அவர்கள் தலைமையில், தோழர் பி. எம். பொன்னுசாமி அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. தி. மு. க. உறுப்பினர்களாகப் பதிவு செய்துகொண்ட தோழர்கள் வந்திருந்தனர் "திராவிட முன்னேற்றக் கழகம் — பல்லடம் நகரக் கிளை" என்று அமைப்பதென முடிவு செய்யப்பட்டது. செயற்குழு ஒன்று பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்- எம். பொன்னுசாமி; துணைச் செயலாளர்- எம். பழனியப்பன்; நிதி உறுப்பினர்- பி. நல்லசாமி; விளம்பர உறுப்பினர்- எஸ். எ. பி. சுந்தரம்.

பின்பு கழகத்தின் எதிர்கால வேலைகள்பற்றி விளக்கமாகப் பேசப்பட்டது. பிறகு நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது. எனத் துணைச் செயலாளர் தோழர் எம். பழனியப்பன் எழுதுகிறார்.

* * *

## தெ. ஆ மாவட்டம்— தற்காலிகக் கிளை

விருதாசலம், அக். 3—

2-10-49 ஞாயிறன்று தென்னார்க்காடு மாவட்டத் தற்காலிக அமைப்புக் கூட்டம் தோழர் சி. முனுசாமி அவர்களது 'பெரியார் இலவத்'தில், சென்னை 'திராவிடன்' ஆசிரியர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் 48 உறுப்பினர்களும், 50-க்கு மேற்பட்ட பார்வையாளர்களும் வந்திருந்தார்கள். தெ. ஆ மாவட்டக் கழகம் முறைப்படி உறுப்பினர்கள் கிளைக் கழகங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அமைக்கப்படும் வரையில், தற்காலிகக் கிளை யொன்றை ஏற்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டது. தற்காலிகக் கிளையின் செயற்குழு உறுப்பினர்களாகக் கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

செயலாளர்—சி. முனுசாமி (விருதாசலம்) துணைச்செயலாளர்—கே. டி. பி. பழனியப்பன் (குறிஞ்சிப்பாடி); நிதி உறுப்பினர் — இரா. சாம்பசிவம் (குறிஞ்சிப்பாடி); விளம்பர உறுப்பினர்—இராம. பழனிச்சாமி (பனையவரம்.) மற்ற செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர்செயற்குழுவின் தனிக் கூட்டம்தனியானதோர் இடத்தில் கூடி நான்கு தீர்மானங்களை நிறைவேற்றிற்று. அடுத்த நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தை 9—10—49-ம் நாள் குளஞ் சாவடியில் தோழர் க. நாஇராசன் அவர்கள் இல்லத்தில் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

விருதாசலம், அக். 9—

அது போன்று குள்ளஞ் சாவடியில் கூட்டம் இனிது நடைபெற்றது விபரம் பின்னால் வெளியிடப்பெறும். எனச் செயலாளர் எழுதுகிறார்.

* * *

## புளியமங்கலம்—கிளை

புளியமங்கலம், அக். 3.—

அரக்கோணத்தை அடுத்துள்ள புளியமங்கலத்தில்; 2—10—49 ஞாயிறு மாலை 3-மணிக்கு கழகக் கட்டிடத்தில் தோழர் எம். கே. அம்பிகாபதி அவர்கள் தலைமையில் திராவிடர் கழக உறுப்பினர்கள் கூடிக் கீழ்க் கண்ட தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

தலைவர் பெரியார் அவர்களின் திடீர் முடிவான திருமணப் போக்கினைக் கண்டிப்பதோடு, இனி அவர்கள் தலைமையிலிருந்து விலகி அண்ணா அவர்களோடு தொடர்ந்து பணியாற்றுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகம்-புளியமங்கலம் கிளை என்று புதிய அமைப்பு ஏற்படுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

புதிய செயற்குழு தேர்ந்தெடுக்க முடிவு செய்யப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்— த. ராமசாமி; துணைச்செயலாளர்—எம். கே. அம்பிகாபதி; நிதிஉறுப்பினர்--இ. முருகேசனார்; விளம்பர உறுப்பினர்— எஸ். பி. கூத்தரசன். மற்றும் சில செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இம்மாத முடிவுக்குள் துவக்க விழா நடத்துவதென முடிவு செய்யப்பட்டுக் கூட்டம் இனிது கலைந்தது மாலை 4 மணிக்கு. என விளம்பர உறுப்பினர் அறிவிக்கிறார்.

* * *

## எடமேலையூர்—கிளை

எடமேலையூர், அக். 3—

2-10 49ல் திராவிடர்கழகக் கூட்டம் தோழர் எஸ். என். சாமி அவர்கள் தலைமையில் கூடி, திராவிடர் கழகம் என்பதை அப்படியே மாற்றி, திராவிட முன்னேற்றக்கழகம் என அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டது.

பெரியார் தனது தள்ளாத வயதில் கழகத் தூண்களாம் மத்திய நிர்வாகக்குழு உறுப்பினர்களைத் துச்சமெனக்கருதி, ஆச்சாரியாரின் அறிவுரை கேட்டு, திருமணம் செய்து கொண்டு, நம்மைச் செம்மறியாட்டுக் கூட்டமாக்கியதை வன்மையாகக் கண்டிப்பதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அவர் தலைமையினின்றும் நீங்கி தி. மு. கழகம் அமைத்து அதிலிருந்து பணியாற்றுவது என்று ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது. பின்பு செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்— எஸ். ராமசாமி; துணைசெயலாளர்--எஸ். உத்திராபதி; பொருள் உறுப்பினர்: ஆலோசனையாளர்—எஸ். என். சாமி; விளம்பர உறுப்பினர்—எஸ். நடராசன். பின்னர் கூட்டம் இனிது முடிந்தது. எனத்தோழர் சு. நாராயணசாமி தெரிவிக்கிறார்.

* * *

## செருடந்தானி—கிளை

செருடந்தானி, அக். 3—

3—10—49 திங்கள் மாலை 6-30 மணிக்கு தோழர் எஸ். சி. மாரிமுத்து அவர்களின் தலைமையில் திராவிட கழகச் செயற்குழுக் கூட்டம் கழக இலவத்தில் கூடியது. அவ்வமயம் திராவிடர் கழகத்தைக் கலைத்து விட்டு, திராவிட முன்னேற்றக் கழகம் என்று மாற்றி அமைப்பதென முடிவு செய்யப்பட்டது.

செயலாளர்—தம்பி. பி. ராமசாமி; துணைச்செயலாளர்-சையத்; பொருள் உறுப்பினர்—ஜே. ராமசாமி; ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்:—ச. மல்லுசாமி, ச. பழனிச்சாமி, ம. ராமசாமி, வெ. ராமசாமி, பொன்னுசாமி, அமீர்.

எனச் செயலாளர் எழுதுகிறார்.

* * *

## இராமநாதபுரம் (முகவை)—கிளை

முகவை, அக். 4—

திராவிடர் கழகச் செயற்குழுக் கூட்டம் 2-10-49-ம் நாள் காலையில் கூடி, திராவிடர் கழகத்தைத் "திராவிட முன்னேற்றக் கழகம்-முகவை கிளை" என மாற்றி அமைப்பதென ஏகமனதாக முடிவு செய்தது. செயற்குழு ஒன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்-இரா. கா. வீரமணி; துணைச் செயலாளர்- செ. ஆறுமுகம்; பொருள் உறுப்பினர்- சோ. சொக்கலிங்கம்; விளம்பர உறுப்பினர்- வெ. மாரிமுத்து.

மற்றச் செயற்குழு உறுப்பினர்கள்:—கா. சண்முகம், அ. அப்பாவு, க. கிருட்டிணமூர்த்தி, ம. சன்னாசி, கா. கிருட்டிணமூர்த்தி, உ. பஞ்சாட்சரம், நாதன்.

எனச் செயலாளர் எழுதுகிறார்.

* * *

## சென்னை 15-வது வட்டம்—கிளை

சென்னை, அக். 7—

சென்னை 15-வது வட்டம் திராவிடர் கழகத்தை, திராவிட முன்னேற்றக் கழகமாக மாற்றுவதென 7-10-49 வெள்ளியன்று பெருவாரியான பழைய, புதிய அங்கத்தினர்களால் தீர்மானிக்கப்பட்டுத், தற்காலிகமாக செயற்குழு வொன்று தேர்ந்தெடுக்கப்பட்டது. செயலாளர்:—சி. வி. ராஜன். பொருள் உறுப்பினர்:—எம். சாமி; விளம்பர உறுப்பினர் :—எ. எஸ். வேணு; அமைப்பாளர் :— வி. முனுசாமி. கழக ஆதரவாளர்கள்:— எ. துரைசாமி, டபுள்யூ. கே. தேவராசன். எனத் தோழர் சி. வி. ராசன் (செயலாளர்) எழுதுகிறார்.

---

# திருவள்ளுவர் இளைஞர் கழகம்

## அறிஞர் அப்பாத்துரை சொற்பொழிவு

சென்னை, அக். 5—

இக் கழக ஆதரவில் மண்ணடி ராஜமன்னார் பள்ளியில் 2-10-49ல் நடைபெற்ற கூட்டத்தில் அறிஞர் கா. அப்பாத்துரை "திருக்குறள் மாண்பு" என்னும் பொருள் பற்றி அரியதொரு சொற்பொழிவாற்றினார்.

அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழன் தவறாது படிக்கவேண்டிய மூன்று நூல்களிலே முதலில் திருக்குறளையும், இரண்டாவதாக சிலப்பதிகாரத்தையும், கடைசியாகத் தொல்காப்பியத்தையும் செவ்வனே ஓதியுணரவேண்டும். திருக்குறளிலே மூன்று மிகச் சிறந்த அதிகாரங்களைக் குறிப்பிட வேண்டுமானால், "ஒப்புரவறிதல்", "கல்வி", "ஊடலுவகை" என்ற மூன்றைத்தான் குறிப்பிடநேரும். முதன் முதல் ஒழுக்கத்தின் மேம்பாட்டை உணர்ந்து ஒழுக்கநூல் வரைந்தவன் தமிழனே ஆவான். ஒழுக்கத்தின் சிறப்பினைப் பிற நாட்டார் அண்மையில்தான் உணர்ந்தனர். திருக்குறளைப் படிக்கும்போது அந்நூலில் உள்ள ஒவ்வொரு சொல்லையும் நன்கு ஆராய்ந்து, தமிழர்கள்மொழி நூல் உணர்ச்சி பெற வேண்டும்."

இவை போன்ற பல அரிய ஆராய்ச்சிக் கருத்துக்களைக் கேட்டோர் அனைவரும் இன்புறும் வகையில் இனிது விளக்கினார். கூட்டத்திற்கு தோழர் கோ. முத்து தலைமை வகித்தார். நன்றி நவில, கூட்டம் இனிது நிறைவேறியது. எனத் தோழர் கா. வேள்பாரி (செயலாளர்) எழுதுகிறார்.

---

## பிறப்பு

கத்திவாக்கம், அக் 30—

இவ்வூர் தோழர் கிருஷ்ணசாமிக்கும், தோழியர் ஆதியம்மாளுக்கும் இன்று மாலை பிறந்த பெண்மகவுக்கு "மாலை மணி" எனப் பெயரிடப்பட்டது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப் பெற்றோம். மகிழ்ச்சி! (ஆ-ர்)

---

## திருத்தம்

"மாலைமணி" இதழ், சென்னை (6-10-49) வெளியூர் (7-10-49) வெளியீட்டில், முதல் பக்கத்தில், வெளிவந்திருக்கும் தலைப்பில், அச்சுப்பிழையின் காரணமாக, "எரிகிறது" என்ற சொல், "எறிகிறது" என்று தவறி விழுந்து விட்டது. எனவே திருத்திக்கொள்க. (ஆ-ர்)

---

## அறிவிப்பு

ரெஜிஸ் மூட்டை பவுடர். மூட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி அயர்ந்த நித்திரை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும். G. பழனியப்ப முதலியார், மதுரை.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press. 2/45, Muthumari Chetty Street, Madras-1.